# காரைக்காலம்மையார் பக்திப் பதிகங்களில் வெளிப்படும் சிவ நடனம் பற்றிய ஓர் ஆய்வு

[1]தாக்ஷாயினி பரமதேவன், [2]சுரேந்திரா நரேந்திரா
[1,2]சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**முன்னுரை**

தேவாரம் அருளிய மூவருக்கும் முன்னதாக தெய்வத் தமிழில் பக்திப் பதிகங்களைப் பாடிய பெருமை உடையவர் காரைக்காலம்மையார். வைணவத்திற்கு ஒரு ஆண்டாள் போல சைவசமயத்திற்கு ஒரு அம்மையபார் வாழ்ந்தார். காரைக்காலம்மையார், மங்கையற்கரசியார், இசைஞானியார் மூவரும் பெண் நாயன்மார்களாகக் காணப்பட்டாலும் பக்தி இயக்கத்திற்கு வித்திட்டு புரட்சி செய்தவர் காரைக்காலம்மையார் ஆவார். சைவசமயக் குரவர்களில் ஒருவரான சுந்தரர் தாம் படைத்த திருத்தொண்டர் தொகையில் காரைக்காலம்மையார் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே இவர் சுந்தரர் காலத்திற்கு முற்பட்டவராவார்.

திருஞானசம்பந்தர் தனது திருவாலங்காட்டு திருப்பதிகத்தின் முற்பாசுரத்திலே

**“வஞ்சப்படுத்தொருத்தி வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டு**
**அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே’’**

என்று குறித்தருள்வதும் அம்மையார் சம்பந்தருக்கு முற்பட்டவர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. சம்பந்தரின் காலம் 7ம் நூற்றாண்டு என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. ஆகவே கி.பி 5 அல்லது 6ம் நூற்றாண்டு காலப்பகுதியில் காரைக்காலம்மையார் வாழந்திருக்கக்கூடும். இவர் சங்கமருவிய கால இறுதிப்பகுதியல் வாழந்திருக்கலாம் என அறிஞர்கள் தி.வை சதாசிவ பண்டாரத்தார், கே.கே. பிள்ளை, வெள்ளை வரணர் முதலானோர் குறிப்பிடுகின்றனர்.

காஞ்சி நாகலிங்கம் முனிவர் பதிப்பித்த பதிகங்கள் பதிப்பில் தேவார ஆசிரியர்களின் பதிகங்களுக்கு முன்னால் காரைக்காலம்மையாரின் பதிகங்கள வைத்துள்ளார். கோயில்களிலும் காரைக்காலம்மையாரின் பாடல்களைப் பாடிவிட்டு பின் தேவாரப் பதிகங்களை ஓதும் பழக்கம் இருந்து வந்துள்ளது. மற்றும் காரைக்காலம்மையாரின் ‘‘திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகமும்’’, சம்பந்தரின் ‘‘தோடுடைய செவியன் விடையேறியோர்..’’ என்று தொடங்கும் பதிகமும் ‘‘நட்டபாடை’’ பண்ணிலே அமைந்துள்ளன. காரைக்காலம்மையாரின் ‘‘எட்டிலவம்..’’ என்று தொடங்கும் பதிகமும் சம்பந்தரின் இரண்டாம் திருமுறையின் முதற்பதிகமும் ‘‘இந்தோளம்’’ எனும் பண்ணில் அமைந்துள்ளது. எனவே சம்பந்தரின் பதிகத்திற்கு முன்னோடி காரைக்காலம்மையார் என்று முனைவர் வை.இரத்தினசபாபதி கூறுகிறார்.

இவ்வாறு காரைக்காலம்மையார் 5ம் அல்லது 6ம் நூற்றாண்டு காலங்களில் வாழ்ந்தவர் என்பதை அறியமுடிகிறது. சங்கமருவிய காலத்துப் பிற்பகுதியில் வாழந்து சைவசமய

வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும், பக்தி மார்க்கத்திற்கும் வித்திட்ட பெண்மணி என்ற பெருமைக்குரியவர்

**சிவநடனங்கள் பற்றிய அறிமுகம்**

சிவபெருமானையே முழுமுதற்கடவுளாகக் கொண்ட சமயம் சைவ சமயமாகும். சிவபெருமானும், அவரது சக்திகளும் கதிரவனும் அவனது கதிர்களும் போன்றன. கதிரவனது கதிர்கள் விரியும் போது உலகிலுள்ள பொருள்கள் விளக்கம் பெறுவது போல சிவனுடைய இச்சை முதலிய செயல்கள் தொழிற்படும் போது தான் பிரபஞ்ச உண்மை புலனாகிறது. இறைவன் சக்தியிலிருந்து வேறுபட்டவனல்ல. சிவனும் சக்தியும் சேர்ந்து ''அர்த்த நாரீஸ்வரர்'' வடிவில் நின்றும், அக்காலத்தில் பஞ்ச கிருத்தியங்களைச் செய்து கொண்டே இருப்பார்.

இறைவன் நடராஜர், கூத்தபிரான், ஆடலரசன் என்ற பல நாமங்களோடு அருள் பாலிக்கின்றார். இவ்வாறு ஆதியும் அந்தமும் இல்லா இறைவனிடமிருந்து 64 கலைகளும் தோன்றின. இக்கலைகளுள் பரதக்கலை சைவசமயத்துடன் நகமும் சதையும் போலவும், பூவும் மணமும் போலவும் இணைந்து காணப்படுகின்றது.

சிவனின் மூன்று வகையான நடனங்கள் முக்கியம் பெறுகின்றது. கைலாய மலையிலே மாலைப் பொழுதிலே ''தெய்வீகப் பல்லியத்துடன்'' ஆடிய போது தேவர்கள் இசையமைத்தார்கள். உலக அன்னையாகிய பார்வதி தேவியை அரியனையில் அமரச்செய்து சிவன் நடனமாடினார். சிவனுடைய பூத கணங்கள் புடைசூழ சிவன் தேவியோடு நடனமாடுவதை ''அரண் அங்கி நன்னில் அறையில் சம்ஹாரம்'' என்கின்றது உண்மை நெறி விளக்கம். இந்நடனம் பற்றி ''சிவ பிரதோஷ தோத்திரம்'' எனும் பனுவிலே வர்ணிக்கப்படுகிறது. இந்நடனத்தில் இறைவன் சிவனபெருமான் இரண்டு கையோடு விளங்குகின்றார். இந்திராதி தேவர்கள் பலவகை வாத்தியங்களை முழங்குகின்றனர். சிவனுடைய பாதத்தில் முயலகன் இல்லை.

சிவனுடைய மற்றுமொரு நடனம் தாண்டவ நடனம். இது சிவனுடைய தாமசிக மூர்த்தமான வைரவர் அல்லது வீரபத்திரர் ஆடும் நடனம். இங்கே பூத கணங்கள் சூழ பத்துக்கரங்கள் உடைய சிவபெருமான் தேவியோடு நடனமாடுகின்றார். தாண்டவ நடனம் ஆரியக்கடவுளுக்கு முன்னுள்ள பாதிக்கடவுளும், பாதிப்பூதமுமாய் உள்ளதொரு தெய்வத்தின் நடனமாகும். இக்கடவுள் நள்ளிரவில் மயானத்தில் சங்கரன் ஆடுவதாகவும், தேவியும் அதில் கலந்து கொள்வதாகவும், பிற்காலத்தில் சைவ, சாக்த இலக்கியங்கள் குறிப்பிடுவதோடு அந்நடனங்களுக்கு மனத்தைக் கவரக் கூடிய ஆழ்ந்த பொருளையும் கற்பிக்கின்றன.

சிவனுடைய மூன்றாவது நடனம் ''நாதந்தா நடனம்'' ஆகும். இது தில்லை சிதம்பரப் பொற்சபையில் நடைபெற்றது. பிரபஞ்சத்தின் மத்திய தானமாயுள்ளது தில்லை. தாருகாவனத்து முனிவர்களை பணிய வைத்த பின்னர் அவர்களும், தேவர்களும் கூடியிருந்த பொன்னம்பலத்தில் நடராஜர் இந்த நடன தரிசனத்தை அவர்களுக்கு அருளினார். சிவனுடைய பஞ்ச கிருத்தியமாக படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில்கள் கூறப்படுகின்றன. உயிர்களை

மென்மேலும் வினை செய்வதில் அதன் மூலமான உயிர்களுக்கு வினையப்படுகின்றது. மும்மலங்களுடன் இருக்கும் ஆன்மாவை அவற்றிலிருந்து பிரித்தெடுத்து அவற்றைத் தூய்மையும், ஒளியுமுடையதாக உயர்த்தப் பேரின்ப நிலையை அடையச் செய்வதை எடுத்துக்காட்டுகின்றது.

''பாண்டரங்க நடனம்'' முப்புரம் எரிக்க எழுந்தருளிய போது ஆடியதாகவும், கலைமகளைத் தேற்றுவதற்கு ஆடியது ''கொடுக்கொட்டி நடனம்'' திரிபுரத்தை எரிப்பதற்கு தேவி தாளமிட தம் கரங்களைக் கொட்டி ஆடியது ''சந்தியா நிருத்தம்''. ஆலகால விடம், திரயோதசியன்று டமருகம், சூழமேந்தி ஆடியது ''சண்ட தாண்டவம்'' திருவாலங்காட்டில் காளியின் ஆணவத்தை அடக்க ஆடியது ''கௌரி தாண்டவம்'' கௌரிக்கு கைலாயத்தில் ஆடிக்காட்டியது ''வீரட்டகாச நடனம்''

முருகன் பிரணவப் பொருளை உணர்த்தும் போது வீரங்கொண்டாடியது ''ஆனந்தத்தாண்டவம்'' பதஞ்சலி, வியாக்கிரபாதர், சிவகாமி முன்னிலையில் சிதம்பரத்தில் ஆடியது ''அனவரத தாண்டவம்'' ஆன்மாக்களுக்கு போக முக்தியை அளிக்க ஆடும் நடனம் ''மாத சங்கார நடனம்''. மகாபிரளயத்தில் ஆன்மாக்கள் பராசக்தியில் ஒடுங்க, பராசக்தி சிவனில் ஒடுங்க ஒருவனே தானாக இருந்து ஆடிய நடனம் என சிவநடனம் பற்றி பல புகழ் பூத்த நடனங்கள் காணப்படுகின்றன.

மேலும் முப்புரம் எரித்த பின் ஆடும் நடனம் ''பந்த நடனம்'' எனவும், கபாலத்தைத் தாங்கிய வண்ணம் ஆடுவது ''கபால நடனம்'' எனவும் அழைக்கப்படுகிறது. இவை தவிர அஜபா நடனம், பிரமரா தாண்டவம், உன்மத்த நடனம், பாராவார் நடனம், தரங்க நடனம், புஜங்க நடனம், பிரம்ஷ நடனம், அட்பை ஹம்ச நடனம், மயூர நடனம், கமல நடனம், எனப் பல நடனங்கள் காணப்படுகின்றன. எட்டு வகையான நடனங்களாக சிருஷ்ட்டி, ஸ்திதி, சம்பராரா, துரோபவா, அநுக்ரஹா, முனிதாண்டவம், அனவரத தாண்டவம், ஆனந்தத் தாண்டவம் என்பவையாகும்.

## காரைக்காலம்மையார் பாடல்களில் வெளிப்படும் சிவனின் நடனம் பற்றிய குறிப்புக்கள்.

சைவசமயத்தின் முன்னோடியாகவும், அம்மையாருக்கு அடுத்து வாழ்வின் மெய்ப்பொருளை, மூலமுதலை, அகில விளையாட்டுடைய அப்பனை மிகத் தெளிவாகக் காட்டியவர் புனிதவதியாராகிய காரைக்காலம்மையாரே என்பது தெளிவாகிறது. பட்டப்பகல் போன்ற பேருண்மை ஆடல் வல்லானாகவும், அருளாளனாகவும், சுடலையாண்டியாகவும், தோடுடைய செவியனாகவும், மாதொரு பாகனாகவும், மண்ணுலகின் அகத்தும், புறத்தும் ஐம்பூதமாக விளங்கும் வித்தின்றியே முளைத்த வித்துவனை உலகுக்கு காட்டிய சிறப்பனைத்தும் காரைக்காலம்மையாரையே சாரும்.

காரைக்காலம்மையாரின் மூன்று படைப்புக்களும் அளப்பரிய, சிறப்பு வாய்ந்தவை. திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகியவற்றில் காரைக்காலம்மையார் சிவபெருமானின் மீது கொண்ட பக்தியையும்,

அவரது தோற்றப் பொலிவுகளையும், அவரது அற்புதங்களையும், சிவனின் அழகினையும் சொற்கோலங்களாகக் காட்டியுள்ளார்.

அற்புதத் திருவந்தாதியில் காதலும், பக்தியும் கசிந்துருகப் பாவமும் பெருக்கெடுக்க, திருவிரட்டை மணிமாலையில் தாயன்பை வெளிப்படுத்தியும், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் ஈமப்புறங்காட்டுக் காட்சிகளும், கையிலையில் இறைவன் ஆடும் ஏழு வகைத் தாண்டவங்களையும், மண்ணகம் இழிந்த தண்ணளியாளனாய் ஆடிக்காட்டிடும் அருமையை எடுத்துக்காட்டுவதாகவும், அளவிலாப் பரம்பொருளின் விளையாட்டுடைய ஆடல் வல்லானின் அருமையையும், பெருமையையும் சிறப்புறக் கூறுகின்றார்.

சிவபெருமானது தோற்றத்தையும், அவன் அணிந்துள்ள சிறப்புமிகு பொருட்களையும், அவனது ஆடற்சிறப்புக்கள் பற்றியும் தமது பதிகங்களில் எடுத்துரைத்திருக்கிறார் காரைக்காலம்மையார். இறைவன் ஆடும் போது அனலேந்தி, எலும்பணிந்திருப்பது பற்றியும் பாடுகிறார். அற்புதத்திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் இறைவனின் தோற்றப் பொலிவு, அருட்குணங்கள், அடியவர்க்கு எளியனாதல் போன்ற செயல்களை கூறுகிறது. இறைவனின் திருநடனத்தைக் காட்டுமாறு வேண்டும் காரைக்காலம்மையார் பேயான நிலையில் இறைவனது திருநடனம் கண்டு உலகம் இன்பமுற அக்காட்சியை மூத்த திருப்பதிகத்தில் பாடுகிறார்.

பிணமெரிக்கும் காட்டில் பேய்கள் வாழும் என்பது மக்களின் நம்பிக்கையாக இருக்கின்றது. அச்சம் தரும் இடுகாட்டில் ஆடும் இறைவனை வர்ணித்ததன் மூலம் அம்மையார் அஞ்சாமையையும், நம்பிக்கையையும், ஆண்மைப் பக்குவத்தையும் ஊட்டுகிறார்கள். இத்தகைய வியத்தகு படைப்பாகிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் இறைவன் திருநடனமாடும் பெருஞ்சுடுகாட்டரங்கு பற்றியும், ஆடல் வல்லானின் ஆடல் முதலிய வர்ணனைகள் பற்றியும் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

காரைக்காலம்மையார் தமது பதிகங்களில் இறைவனின் ஆடல் பெருமைகளை அழகாகப் பாடியுள்ளமை எமக்குக் கிடைத்த பொக்கிஷம் என்றே நாம் பெருமை கொள்ள வேண்டும்.

**அற்புதத் திருவந்தாதி**

காரைக்காலம்மையாரால் அருளப்பட்ட இந்நூலானது சைவத் திருமுறைகளில் பதினோராம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. இந்நூலே அந்தாதி முறையில் பாடப்பட்ட முதல் நூல் என்பதனால் ''ஆதி அந்தாதி'' எனவும், ஆதி, அந்தமில்லாப் பரம்பொருள் மேல் பாடப்பட்டதால் ''திருவந்தாதி'' என்றும் அழைக்கப்படுகிறது. அற்புதம் என்றால் சிறப்பு என்று பொருள் சிவபெருமானின் சிறப்புக்களை, அற்புதங்களைப் பாடும் நூல் திரு என்ற சிறப்பு அடைமொழியோடு அற்புதத் திருவந்தாதி என்று குறிக்கப்படுகின்றது.

இந்நூலின் பாடல்கள் அந்தாதி முறையில் அமைந்துள்ளது. அந்தாதி என்பது ஒரு செய்யுளின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சீர், சொல், அடி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று அதற்கு அடுத்து செய்யுளில் முதலில் வருவதாகும். அற்புதத் திருவந்தாதியின் முதற் பாட்டின் முடிவுச் சொல் அடுத்த பாட்டின் முதற்சொல்லாக

அமைந்திருக்கும். இதனை மண்டலித்தல் என்பர். இறைவனின் திருவடியை புகழ்ந்து பாடியதால் ‘‘திருவந்தாதி’’ எனப் பெயர் பெற்றது.

அந்தாதி இலக்கியத்தில் முதல்முதலாக தோன்றியதாலும், யாவராலும் வியந்து போற்றுவதற்குரிய சிறுமறையை உணர்த்துவதாலும் இதன் மிகச் சிறப்பினைக் கருதி அற்புதத் திருவந்தாதி என அழைக்கப்பட்டது. இந்நூல் நூற்றியொரு பாடல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் அந்தாதித் தொடை அமையப் பெற்ற நான்கு அடிகள் கொண்டதாகும். வெண்பா வகைப் பாடலாகவும் கருதப்படுகிறது. காரைக்காலம்மையார் இயற்றமிழிலும், இசைத் தமிழிலும் வல்லவராக விளங்கினார். இயற்றமிழுக்கு அற்புதத் திருவந்தாதி போன்ற அவரது பாடலகளைக் குறிப்பிடலாம். அற்புதத் திருவந்தாதியின் இறுதிப்பாடல் நூற்பயன் காணும் பாடலாக அமைந்துள்ளது. வெண்பாவில் அந்தாதி இலக்கியத்தை இயற்றிய பெருமை காரைக்காலம்மையாரையே சாரும். நீதி நூல் காலத்தில் வெண்பா யாப்பினை பக்தி இலக்கியத்திற்குப் பயன்படுத்திய பெருமை அம்மையாரையே சாரும். எளிய மொழி நடைகளைக் கொண்டு விளங்கும் இந்நூலின் இறைவனைப் பற்றிய பல்வேறு திறமும் எடுத்துதைக்கப்பட்டுள்ளன. தம்மை இறைவன் ஆட்கொண்ட திறமும், அவனது தோற்றம், பொலிவு, அவனது சிறப்பியல்புகள் இறைவனிடம் ஆட்பட்ட திறம் முதலியவற்றைச் சுவைபட சொல்லியிருக்கிறார். இதன் இசைச் சிறப்பிற்கு இதுவும் ஒரு காரணம் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இறைவனை நோக்கி உரிமையோடு கேட்கும் வினாக்கள் அம்மையாரின் மன உணர்வுகளை நன்கு புலப்படுத்துகின்றன. நகைச்சுவை பொங்க அவர் இறைவனைப் பற்றிக் கூறும் செய்திகள் அவரது உரிமையுணர்வைக் காட்டுவனவாகும்.

இறைவனிடத்துக் கொண்ட அளவற்ற ஈடுபாட்டில் காரைக்காலம்மையாரின் பாடல்களின் பக்திச் சுவையோடு உரிமை நெறியும் உடன் விளங்குவதைக் காணலாம்.

**பிறந்து மொழி பயின்ற பின் எல்லாம் காதல்**
**சிறந்த நின்சே அடியே சேர்ந்தன் - நிறம் திழம்**
**மைஞ் ஞான்று கண்டத்து வானோர் பெருமானே**
**எஞ்ஞான்று தீர்ப்பது இடர்**

(அ.தி. -1)

இவ்வாறு அம்மையார் தனது முதற்பாடலிலே இறைவனை நினைத்து உருகிப்பாடுகிறார். மண்ணில் பிறந்து பேசத் தொடங்கிய கால முதல் அன்பின் முதிர்ச்சியால், இறைவா நின் திருவடியையே எண்ணினேன். கருநீலகண்டமுடைய வானவர் தேவனே நீ எப்பொழுதும் எங்கள் பிறவித் துன்பத்தை நீக்கி ஆட்கொள்வாயாக! என்று பாடி இறையருளில் திளைத்து விளங்குவதைக் காணலாம்.

**திருவிரட்டை மணிமாலை**

இருபது பாடல்களைக் கொண்ட இந்நூலானது அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. திரு என்னும் சிறப்பு அடைமொழி கொண்டது. வெண்பாவும், கட்டளைக்கலித்துறையுமாய் இந்நூல் அமைந்துள்ளது. இருவித மணிகளால் கோர்த்த மாலை கழுத்திற்கு அழகு தரும். அதுபோல இருவிதப்பா வகையால் தொடுக்கப்பெற்ற இந்நூல் சிவபெருமானின் அழகினைச் சொற்கோலங்களாக வெளிப்படுத்துகின்றன.

இரட்டை மணிமாலை என்னும் இலக்கிய வகைக்கு முன்னோடியாக அம்மையாரின் இப்பிரபந்தம் கருதப்படுகிறது. வேறெந்த மொழியிலும் இல்லாமல் தமிழில் மட்டும் 96 சிற்றிலக்கிய வகைகள் உள்ளன. அதில் மாலை என்பது ஒரு வகை இரட்டை மணிமாலை வகையாகும் எனக் கருதப்படுகின்றன.

அவ்வாறே கட்டளைக் கலித்துறை வகைப் பாடலினாலும் வெண்பாவைப் பாடலினாலும் முன்னும், பின்னுமாக முறையே தொடர்ந்து அந்தாதி அழகால் மாலை போன்று அமையப் பாடப்பட்டதால் ''திருவிரட்டை மணிமாலை'' எனப் பெயர் பெற்றது எனவும் கூறப்படுகின்றது. வேறுபட்ட இரு யாப்பு வடிவங்களால் ஒரு பொருள் குறித்து இருபது பாடல்களால் பாடப்பெறும் நூல் இரட்டை மணிமாமலை ஆகும். வெண்பாவை வைரமாகவும், கட்டளைக்கலித்துறை மாணிக்கமாகவும் உருவகம் செய்து இவ்விருபது பாடல்களுக்கும் ''இரட்டைமணிமாலை'' எனப்பெயர் சூட்டினர்.

**''வெண்பா முதலாகக் கலித்துறை பின்வரும்**

**இந்த இருபதிரட்டை மணிமாலை''**

என்கிறது பன்னிரு பட்டியல் இலக்கண நூல். ஆனால், இவ்விலக்கண நூலுக்கு மிக முற்பட்ட காலத்தில் வாழ்ந்த அம்மையாரின் பணுவலில் முதலில் வெண்பா வராமல் கட்டளைக்கலித்துறையும், அடுத்து வெண்பாவும் அமைந்துள்ளன. சங்க காலத்தில் கட்டளைக்கலித்துறைப் பாவில் பாடப்பெற்ற நூல் எதுவும் கடைக்கப்பெறவில்லை. தொல்காப்பியர் கலிப்பாவின் வகைகளைச் சொல்லும் போது இதனைக் கூறவில்லை.

தேவாரம் பாடிய மூவர் காலத்துக்கும் முற்பட்டவர் காரைக்காலம்மையார் எனில் கட்டனைக் கலித்துறை என்னும் யாப்பிற்கு மூல இலக்கியமாக விளங்குவது காரைக்காலம்மையார் பாடிய இரட்டைமணிமாலையிலுள்ள கட்டளைக் கலித்துறை செய்யுள்கள் ஆகும். மூவர் காலத்துக்கும் பிற்பட்ட காலத்தவர் எனில் கட்டனைக்கலித்துறை வகைப்பாக்களை முதன்முதலில் பாடியவர் மாணிக்கவாசகர் ஆவார் எனவும் குறிப்பிடுகின்றது.

**திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்**

திருவாலங்காட்டில் சிவபெருமான் நடனம் ஆடுவதைக் கண்டு காரைக்காலம்மையார் பாடிய பாடல்கள் ''திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்'' ஆகும். பதிகம் என்பது ''கோதிலோர் பொருளைக் குறித்து ஐயிரண்டு பாவெடுத்து உரைப்பது'' என்கிறது. முத்து வீரியம் (எண்155) இவ்விலக்கணப்படி திருக்கடைக்காப்பு நீங்கலாகப் பத்துப்பாடல்கள் கொண்டது. அம்மையாரின் பதிகங்கள் பதிகமுறையில் பாடப்பெற்ற முதல் பாடல்கள் என்பதால் இதனை ஆதிப்பதிகம் என்று அழைப்பர்.

காரைக்காலம்மையார் கயிலை சென்று இறைவனிடம் அவன் மேல் இறவா அன்பும், பிறவாமையும், பிறந்தால் அவனை மறவாமையும் வேண்டினார். அத்துடன் பெருமான் ஆடும் போது அருகில் இருந்து தாம் மகிழ்ந்து பாடி அவன் அடிக்கீழ் இருக்கவேண்டும் என்றும் வேண்டினார். இதனை சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில்

**''இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்**

**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் - உனை என்றும்**

**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்''**
**(பெரிய புராணம் - சேக்கிழார்)**

எனப் பாடியுள்ளார்.

இறைவன் அவ்வாறே ''திருவாலங்காட்டில் யாம் ஆடும் போது நீ மகிழ்ந்து எம்மைப் பாடுவாய்'' என்று அருளிச் செய்தனன். அம்மையாரும் அவ்வாறே திருவாலங்காடு சென்றடைந்து இறைவன் திருநடனத்தை நேரடியாகக் கண்ணுற்று இரண்டு திருப்பதிகங்கள் பாடி மகிழ்ந்தார். இதில் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் மொத்தம் 22 பாடல்களில் முதல் பதினொரு பாடல்கள் ''நட்டபாடை'' பண்ணிலும் அடுத்தவை ''இந்தளம்'' என்ற பண்ணிலும் அமைந்து சிறந்து விளங்குகின்றது. ஒரு பொருள் தன்னைக் குறித்துப் பண் செய்யுள் எனப் பிரபந்த தீபமும் பப்பத்தால் எத்துறையும் பாடல் பதிகமதே! எனச் சுவாமிநாதமும் பதிக வடிவத்தைப் பொருள்கள் வரையறை இல்லாது பாடல் எண்ணிக்கை அளவிற்குட்பட்டுப் பாடுவதைக் குறிக்கின்றன. மூத்த திருப்பதிகம் என்ற சொல்லாட்சி பிற பதிகங்களுக்கு மூத்த தொன்மையைக் குறிப்பதாக அமைகின்றது. அந்தாதியைப் போலவே பதிகமும் புதியவகை இலக்கியமாகவும், இவ்விரு சிற்றிலக்கிய வகைகளிலும் முதல் படைப்புக்களாகக் காரைக்காலம்மையாரின் படைப்புக்களே விளங்குகின்றன. இப்பதிகங்களுக்கு ''நட்டபாடை'' எனும் பண் அமைத்துப்பாடி பதிகங்களை இசைத்தமிழில் பாடுவதற்கும் வழிவகுத்த முன்னோடியாகத் திகழ்கிறார் காரைக்காலம்மையார்.

இறைவனின் திருக்கூத்தை இறைவியும், தேவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்றும் எடுத்துரைக்கின்றார். சிவபெருமான் திருவாலங்காட்டில் ஆடிய ஊழிக்கூத்தே இத்திருப்பதிகங்களின் உட்பொருளாக அமைந்துள்ளது. கையிலையில் இறைவன் ஆடும் ஏழுவகைத் தாண்டவங்களையும் திருவாலங்காட்டி மண்ணகம் இழிந்த தண்ணளியானை ஆடிக்காட்டும் அருமையினைச் செப்புவனவாகவும், அளவில்லா விளையாட்டையுடைய ஆடல்வல்லானின் அருமையும் பெருமையும் ஒருங்கே கூறுவனவாகவும் புலப்படுகின்றமை சிறப்புக்குரிய விடயமாகும்.

**கொங்கை திரங்கி நரம்பு எழுந்து**
**குண்டுகண் வெண்பல் குழி வயிற்றுப்**
**பங்கி சிவந்து இருபற்கள் நீண்டு**
**பரடு உயர்நீள கணைக்கால் ஓர் பெண் பேய்**
**தங்கி அலறி உலறுகாட்டில்**
**தாழ்சடை எட்டுத்திசையும் வீசி**
**அங்கம் குளிர்ந்து அனலர் ஆடும் எங்கள்**
**அப்பன் இடம் திரு ஆலங்காடே**

(தி.தி-1)

தளர்ந்த உடல், எழுந்து புடைத்துள்ள நரம்புகள், குழிவிழுந்த கண்கள், நீண்ட வெண்பற்கள் உள்வாங்கிய வயிறு, சிவந்த தலைமயிர், நகக்கண் நீண்டு வளர்ந்த,

பரந்து உயர்ந்த கனைக்கால்கள் இவற்றை உடைய ஒரு பெண் பேய் நன்காட்டிலே கூச்சலிட்டுக் கத்தும் அங்கே தாழ்ந்த சடைமுடிகள் எட்டுத்திசையும் பறக்க மனமகிழ்ந்து அனலைக் கையிலேந்தித் தாண்டவம் ஆடும் என் அப்பனின் திருவரங்கு திரு ஆலங்காடு ஆகும் எனவும் காரைக்காலம்மையார் ஏழு வகைத் தாண்டவங்களில் ஒன்றான தாழ் சடையுடன் எட்டுத்திசையும் பரவி ஆடும் தாண்டவமான சம்ஹார தாண்டவத்தைக் குறிப்பதாக இப்பாடலில் பாடியுள்ளார்.

**"கள்ளிக்கவட்டு இடைக்காலை நீட்டிக்**
**கடைக்கொள்ளி வாங்கி மசித்து மையை**
**விள்ள எழுதி வெடுவெடு என்ன**
**நக்கு வெருண்டு விலங்கு பார்த்துத்**
**துள்ளிச்சுடலைச் சுடுபிணம் தீச்**
**சுட்டிட முற்றும் சுழிந்து பூழ்த்தி**
**அள்ளி அவிக்க நின்று ஆடும் எங்கள்**
**அப்பன் இடம் திரு ஆலங்காடே"**

(தி.தி.-2)

எரிகின்ற கள்ளி மலரக்கட்டைகளிடையே தன் காலை நீட்டி, தீந்த கட்டையை எடுத்துத் தன் விழிக்கு மையாகத் தீட்டி வெடு வெடுவென்று சிரித்து, வெருண்டு அங்கு உரு கழுதையைப் பார்த்துத் துள்ளி எழுந்த சுடலையிலே எரிகிற பிணங்களின் மீதெல்லாம் விழுந்து அங்குள்ள சாம்பல் புழுதியை அள்ளிச் சுடு நெருப்பை அவிக்க முயலும் திரு ஆலங்காடே என் அப்பன் சிவன் மகிழ்ந்தாடும் திருத்தலமாகும். இப்பாடலிலும் சம்ஹாரத் தாண்டவத்தை உணர்த்துவதோடு இறைவன் ஆடும் திருத்தலத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

காரைக்காலம்மையாருக்கு ஊன் நிறைந்த அழகு மறைந்து என்புடம்பாய் விண்ணும், மண்ணும் விளங்கும் பேய்வடிவம் பெற்றார். அதன் பின் அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை ஆகிய நூல்களைப் பாடி சிவபெருமானை வழிபட்டார். இவ்வாறாகக் காரைக்காலம்மையார் சரித்திரம் பல வகையிலும் குறிக்கோள்களை உணர்த்திக் கொண்டே இருக்கின்றது. இவ்வம்மையாரின் பக்தியைக் கொண்டே சைவ மக்கள் ஒழுகுகிறார்கள். (சுப்பையா.மு. காரைக்காலம்மையார்- 1999. பக்..50)

இன்னொரு கருத்தும் இங்கே எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றது. புனிதவதியார் திருக்கையிலையில் காலால் நடத்தல் ஆகாது என்று எண்ணித் தலையால் நடந்து சென்றார். கையிலையில் இறைவனுடன் வீற்றிருக்கும் உமையம்மையார் அதைக் கண்டு சிவபெருமான் ''அம்மையே'' எனச் செம்மொழியால் அழைத்தார். இது சிவபெருமான் மீது கொண்ட அன்பை தற்காலத்துக்கு உணர்த்தும் குறிக்கோள். மேலும் செந்தமிழையும், சிவநெறியையும் சிறப்புற வளர்த்த காரைக்காலம்மையார் ஆதலில் அவர் வரலாற்றையும் அருளிய நூல்களையும், இசைச்சிறப்பினையும் ஆராய்ச்சி செய்தல் நம்மவர் கடமையாகும். அவரது பாடல்களில் வெளிப்படும் இறைவனின் ஆடல்பற்றிய கருத்துக்கள் மிகவம் சிறப்பு வாய்ந்தன என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதியில் இறைவனது திருநடனத்தைக் காட்டுமாறு வேண்டுகின்றார். பேயான நிலையில் இறைவனது திருநடனம் கண்டு உலகம் இன்புற அக்காட்சியை மூத்த திருப்பதிகங்களில் பாடுகின்றார். மேலும் பேயக்கணங்கள் சூழ்ந்து நிற்க இறைவன் சுடுகாடடில் ஆடுவது அச்சம் விளைவிக்குமே என்று ஆசை விளைவிக்காது. ஆனால் அம்மையாருக்கோ அவர் ஆடலைப் பார்த்து ரசிப்பதில் பேராசை எழுவதையும் அறியலாம். இத்தகைய சிறப்பு வாய்நத காரைக்காலம்மையார் பாடல்கள் தனித்துவம் பெற்றுக்காணப்படுகின்றமை எமக்குக் கடைத்த வரப்பிரசாதமாகும் என்பதில் ஐயமில்லை.

பிரச்சினைகளை எதிர்நோக்கிய போது அம்மையார் செயல்பட்ட விதங்கள் சைவ பக்தி இயக்கத்திற்கு முன்னோடியாக சிவனை முழுமுதற்கடவுளாக பாடிய பாடல்கள் சிவதாண்டவம் பற்றிய கருத்தாக்கங்கள், அலக்கிய வடிவங்கள் என பரந்துபட்ட துறைகள் எல்லாவற்றிலும் காரைக்காலம்மையார் ஒர முன்னோடி. அக்காலச் சூழலில் வைத்து நோக்கும் போது அவர் செய்த தனிமனிதப் புரட்சி எனலாம். இவரது ஆடல் செய்திகள் எமக்குக் கிடைத்த கொடை என்பது சிறப்பிற்குரிய விடயமாகும். சைவர்களாக உள்ள அனைவருக்கும் நடனத்துறையை விரும்ப கற்றவர்களும் இவரது பாடலில் கூறும் சிவதாண்டவம் பற்றிய கருத்துக்கள் பயனுள்ளதாகக் காணப்படும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**முடிவுரை**

ஆலயங்களில் அறுபத்துநான்கு கலைகளில் பரதக்கலை போற்றத்தக்க கலையாகும். பரதக்கலையின் அத்திவாரம் கூத்தபிரான் ஆவார். கதிரவனும் அவனது கதிர்கள் போன்று பிரகாசமாயும் உலகிற்கு அருள்புரிபவராவார். இவரின் ஆடற்சிறப்புக்களும், ஆடல்களும் அனைவரையும் பேரின்பத்திற்கு வழிவகுக்கக்கூடியனவாகும். இத்தகைய புகழ் பூத்த இறைவனின் ஆடற்சிறப்புக்கள் பற்றி காரைக்காலம்மையார் இவரது பாடல்களான அற்புதத் திருவந்தாதி, திரவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்பவற்றில் பாடியுள்ளார்.

‘‘உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்’’ ஆகிய இறைவனைப் போற்றுகின்ற காரைக்காலம்மையார் வரலாற்றை அறிந்து கொள்வது பெரிய பேறாகும். காரைக்காலம்மையாரின் செய்யுள் வகைளும், நடையும் சிவனடியார்களுக்கு முன்னோடியாக உள்ளது என்பது சிறப்பாகும். சிவனின் ஏழு வகைத்தாண்டவம் பற்றி காரைக்காலம்மையார் அவரது பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளமை அவர் பாட்டிற்கு அழகூட்டுவதாகவும், சிறப்பூட்டுவதாகவும் உள்ளது.

இவரது பாடல்கள் சிவபெருமானின் ஆடலை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல் ஆடற்சிறப்பு, வாழ்க்கைத் தத்துவங்கள், என்பவற்றை வெளிப்படுத்தும் முகமாக இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

01. காரை இறையடியார், 1990 கன்னித் தமிழ் வளர்த்த காரைக்கால் அம்மையார், சென்னை

02. ஞானசம்பந்தர்.சு 1994, பெரிய புராணம் ஓர் பார்வை, சென்னை.

03. சுப்பையா.மு 1999, காரைக்கால் அம்மையார், சென்னை.
04. ஞானகுலேந்திரன், 2007, தெய்வத்தமிழிசை, கொழும்பு, இலங்கை.
05. லீலாம்பிகை, 2001, நடனசாரம், யுனிஆர்ட்ஸ், கொழும்பு, இலங்கை.
06. எஸ். என். ஸ்ரீராமதேசிகன், நாட்டியசாஸ்திரம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவகம், சென்னை.
07. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, 2008, சிவானந்த நடனம், கொழும்பு, இலங்கை